# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 ஆனி 10 செவ்வாய்க்கிழமை 24.06.2025 கதிர் 234



யாழ் மண்ணிலிருந்து இணைய வெளிக்கு - Yarl Muttram Youtube Channel




## யாழ். மாவட்ட அரச அதிபராக நியமிக்கப்பட்ட பிரதீபன் உத்தியோகபூர்வமாகக் கடமைகளைப் பொறுப்பேற்பு!





### மாவட்ட செயலகத்தில் அமோக வரவேற்பு

யாழ்ப்பாணம், ஜூன் 24

யாழ்ப்பாணம் மாவட்ட அரச அதிபராக நியமனம் பெற்றுள்ள மருதலிங்கம் பிரதீபன் இன்று உத்தியோகபூர்வமாகத் தனது கடமைகளைப் பொறுப்பேற்றார். இதன்போது அவருக்கு அமோக வரவேற்பும் அளிக்கப்பட்டது.

இந்த நிகழ்வு யாழ். மாவட்ட செயலகத்தில் மேலதிக மாவட்ட அரச அதிபர் ஸ்ரீமோகன் தலைமையில் மதத் தலைவர்கள், மாவட்ட செயலக

7 ➤

# 2ஆம் நாளாகவும் தொடர்கின்றது ‘அணையா விளக்கு’ போராட்டம்

### செம்மணியில் பலரும் திரண்டு பங்கேற்பு





யாழ்ப்பாணம், ஜூன் 24

செம்மணி மனிதப் புதைகுழிக்குச் சர்வதேச நீதி கோரிய ‘அணையா விளக்கு’ போராட்டம் இன்று இரண்டாவது நாளாகவும் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றது.

செம்மணி - சித்துப்பாத்தி இந்து மயானத்தில் அடையாளம் காணப்பட்ட மனிதப் புதைக்குழிக்குச் சர்வதேச விசாரணை கோரி மக்கள் செயல் அமைப்பின் ஏற்பாட்டில் ‘அணையா விளக்கு’ எனும் மூன்று நாள் தொடர் போராட்டம் யாழ். நல்லூர் வளைவுக்கு அருகில் நேற்றுக் காலை ஆரம்பமானது.

7 ➤

## மன்னார் நகர சபை ‘சங்கு’ கூட்டணி வசம்

### ரிஷாத் அணி, ‘திசைகாட்டி’ ஆதரவு

மன்னார், ஜூன் 24

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், தேசிய மக்கள் சக்தி ஆகிய கட்சிகளின் ஆதரவுடன் மன்னார் நகர சபையின் ஆட்சி அதிகாரத்தை ஜனநாயகத் தமிழ்த் தேசியக்

7 ➤



### திசைகாட்டி, சங்கின் ஆதரவுடன்

## மன்னார் பிரதேச சபையை கைப்பற்றிய ரிஷாத் அணி!

### தவிசாளராக ஜப்ரான் தெரிவு

மன்னார், ஜூன் 24

தேசிய மக்கள் சக்தி மற்றும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி ஆகிய கட்சிகளின் ஆதரவுடன் மன்னார் பிரதேச சபையின் ஆட்சி அதிகாரத்தை அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சி கைப்பற்றியுள்ளது.

தவிசாளராக அகில இலங்கை மக்கள் காங்கிரஸின்

7 ➤



## குச்சவெளி பிரதேச சபையின் ஆட்சியைக் கைப்பற்றிய மு.கா.

### தவிசாளராக முபாரக் தெரிவு



குச்சவெளி, ஜூன் 24

இன்று காலை குச்சவெளி பிரதேச சபையின் தவிசாளர் மற்றும் உப தவிசாளரைத்

7 ➤



## திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச சபை தமிழரசுக் கட்சி வசம்!

திருகோணமலை, ஜூன் 24

திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச சபையின் ஆட்சி அதிகாரத்தை இலங்கைத் தமிழரசுக்கட்சி கைப்பற்றியுள்ளது.

இன்று மாலை

7 ➤

**- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -**

# ஸ்ரீலங்கன் விமான சேவை குறித்து வெளியான அறிவிப்பு!

கொழும்பு, ஜூன் 24

கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் இன்று (24) அனைத்து விமான சேவைகளும் வழமைபோல் இயங்கும் என இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபை அறிவித்துள்ளது.

தற்போதைய பிராந்திய சூழ்நிலைகள் காரணமாக சில விமானங்களில் பயண தாமதங்கள் ஏற்பட்டுள்ள போதிலும், திட்டமிடப்பட்ட அனைத்து விமானங்களும் வழமைபோல் இயக்கப்படும் என போக்குவரத்து அதிகார சபை உறுதிப்படுத்தியுள்ளது.

இதற்கிடையில் கட்டாரிலுள்ள அமெரிக்க இராணுவத் தளம் மீது ஈரான் மேற்கொண்ட ஏவுகணைத் தாக்குதலையடுத்து, மத்திய கிழக்கு நாடுகளுக்கான குறிப்பாக குவைத், அபுதாபி மற்றும் தோஹாவுக்கு பறந்து கொண்டிருந்த 5 ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் விமானங்கள் வேறு விமான நிலையங்களுக்கு நேற்று திருப்பி விடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

தரையிறங்க ஏதேனும் விமானங்கள் கோரப்பட்டால், மத்தள விமான நிலையமும் கட்டுநாயக்க விமான நிலையமும் தயாராக இருப்பதாக சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபை தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் டோஹாவில் அருகிலுள்ள அமெரிக்க விமானப்படை தளத்தின் மீது ஈரான் நடத்தும் பதிலடித் தாக்குதல்களை எதிர்பார்த்து நேற்று (23) மூடப்பட்டிருந்த தனது வான்வெளியை கட்டார் மீண்டும் திறந்துள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

# கொழும்பில் மாணவி தற்கொலை செய்துகொண்ட விவகாரம்– நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவு!

கொழும்பு பாடசாலை மாணவி துஸ்பிரயோகம் கொழும்பிலுள்ள பிரபல பாடசாலை ஒன்றில் கல்வி பயின்றுவந்த 16 வயதுடைய மாணவி அம்ஷிகா தற்கொலை செய்துகொண்ட சம்பவம் தொடர்பில் தாக்கல் செய்யப்பட்ட முறைப்பாடு தொடர்பான விசாரணையின் முன்னேற்றம் குறித்து அறிக்கை அளிக்குமாறு கொழும்பு நீதவான் நீதிமன்றம் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பான முறைப்பாடு நேற்றைய தினம் கொழும்பு மேலதிக நீதவான் பசன் அமரசேன முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போது கொழும்பு வடக்கு குழந்தைகள் மற்றும் மகளிர் பணியக அதிகாரிகள், உயிரிழந்த சிறுமியின் தாய், மூன்று பாடசாலை மாணவிகள் மற்றும் ஒரு ஆசிரியரிடமிருந்து வாக்குமூலங்களைப் பதிவு செய்துள்ளதாக பொலிஸார் நீதிமன்றத்தில் தெரிவித்தனர். அத்துடன் விசாரணைக்குத் தேவையான பாடசாலையின் சிசிடிவி கெமராக்களின் டி.வி.ஆர் இயந்திரம், மற்றொரு விசாரணைக்காக பொது நிர்வாக அமைச்சகத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதனால் ஏற்பட்ட தாமதம் குறித்து கேள்வி எழுப்பிய நீதவான், உடனடியாக இயந்திரத்தைப் பெற்று மேலதிக விசாரணைகளை மேற்கொள்ளுமாறு உத்தரவிட்டார். மேலும் குறித்த சம்பவம் தொடர்பிலான முறைப்பாட்டை எதிர்வரும் ஜூலை 7 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு அழைக்க உத்தரவிட்ட நீதவான், அனறைய தினம் விசாரணையின் முன்னேற்றம் குறித்த அறிக்கையை சமர்ப்பிக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

# சிக்கலில் ஷிரந்தி

கொழும்பு, ஜூன் 24

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் மனைவி ஷிரந்தி ராஜபக்ஷவால் பராமரிக்கப்பட்டதாகக் கூறப்படும் மோசடி வங்கிக் கணக்கு குறித்து மீண்டும் விசாரணை நடைபெற்று வருவதாக பொது பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகாரத் துணை அமைச்சரும் சட்டத்தரணியுமான சுனில் வட்டகல தெரிவித்துள்ளார்.

அண்மையில் பாராளுமன்ற விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இந்த நிதி மோசடிகள் தொடர்பான தகவல்களை குறிப்பிட்டுள்ளார்.

‘சிரிலிய சவிய’ என்ற தலைப்பில் அவரது பெயரில் ஒரு போலி கணக்கு திறக்கப்பட்டதாகவும், ‘சிரிலிய’ அமைப்பின் வங்கிக் கணக்குகள் தொடர்பான ஆணை படிவம் மோசடியாக வங்கியிலிருந்து நீக்கப்பட்டதாகவும் அவர் கூறினார்.

அமைச்சர் மேலும் கூறியதாவது,

தற்போது இடைநிறுத்தப்பட்ட இந்தக் கணக்கு, நவம்பர் 14, 2006 அன்று, கொழும்பு 10, டார்லி சாலையில் உள்ள சுதுவெல்ல கிளையில், 143ஃ1ஃ001ஃ4ஃ6235069 என்ற கணக்கு எண்ணின் கீழ் மக்கள் வங்கியில் திறக்கப்பட்டது. ஷிரந்தி ராஜபக்ஷ கணக்கின் தலைவராக பட்டியலிடப்பட்டுள்ளார்.

கல்யாணி திசாநாயக்க செயலாளராகவும், நிரோஷா ஜீவனி பொருளாளராகவும் உள்ளனர்.

இந்தக் கணக்கில் தற்போது ரூ.43 மில்லியன் இருப்பு உள்ளது. பதிவுகள் ரூ.88 முறை 82,900,088 ரூபாய் டெபாசிட் செய்யப்பட்டுள்ளது. அதே நேரத்தில், 129 முறை 39,015,656 ரூபாய் திரும்பப் பெறப்பட்டுள்ளது.

கூடுதலாக, ‘சிரிலிய’ என்ற பெயரில் ரூ.10 மில்லியன் நிலையான வைப்புத் தொகை திறக்கப்பட்டுள்ளது.

நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவு (FCID) இந்த விவகாரம் குறித்து மீண்டும் விசாரணைகளை தொடங்கியுள்ளது.

ராஜபக்ஷ குடும்பத்தினர் சம்பந்தப்பட்ட பல சந்தேகத்திற்குரிய நிதி பரிவர்த்தனைகளையும் துணை அமைச்சர் குறிப்பிட்டார்.

அதாவது, CSN (கார்ல்டன் ஸ்போர்ட்ஸ் நெட்வொர்க்) திறைசேரியிலிருந்து பெற்றதாகக் கூறப்படும் ரூ.152 மில்லியன்.

தனது பெற்றோருக்கு நினைவுச்சின்னம் கட்டுவதற்காக நகர மேம்பாட்டு அதிகாரசபையிடமிருந்து கோத்தபய ராஜபக்ச பெற்ற ரூ.35 மில்லியன்.

அத்துடன், மல்வானாவில் ஒரு வீட்டை வாங்க பசில் ராஜபக்ஷ ரூ.208 மில்லியன் பயன்படுத்தினார். (ஐ)

SUHATHEHAM ATHULARSAALAI (PVT) LTD
சுகதேகம் ஆதுலர்சாலை (பீவீட) எல்டீடி
Neithal Beach city, Navatkuli, Jaffna
Company No- PV0031448

சித்த, ஆயுர்வேத, மேற்கத்ய இணைந்த மருத்துவ சேவை

Opening Hours - 9.00 am - 5.00 pm
Monday - Saturday

Treatment for Following Diseases
- Joint disorders சகல விதமான மூட்டுவாதங்கள்
- Paralysis பாரிசவாதம்
- Skin diseases தோல் நோய்கள்
- obesity உடற்பருமன்
- Gynecological problems - பெண்ணியல் நோய்கள்
- A norectal diseases மூல வருத்தம்
- Diabetic Mellitus நீரிழிவு
- Diabetic foot ulcers - நீரிழிவு புண்கள்
- Vericose vein Kidney stone சிறுநீரககல்
- Hypertension உயர்குருதியமுக்கம்
- cholesterol கொலஸ்திரோல்
- GGIT disorders சமிபாட்டுத் தொகுதியுடன் தொடர்பான நோய்கள்

இலவச மருத்துவ முகாம்
* போயா தினங்களில் காலை 9 மணி தொடக்கம் மாலை 5.30 மணி வரை நடைபெறும்.
* இலவசமாக குருதியமுக்கம் நிறை, உயரம், உடற்திணிவுச்சுட்டி என்பவற்றை அளவிட முடியும்

Special Treatments
- Full body Therapy
- Head Massage
- Foot Massage -
- Herbal Medicated Bath
- Decoction Bath
- Shirod hara
- skin care therapy
- Nasya
- wellness treatment through yoga & counselling
- Leech Therapy

அனைத்து விதமான குழந்தைகளுக்கான மூலிகைத் தாவரங்கள், கோரோசனை மாத்திரைகள், கிரந்தி எண்ணை என்பனவற்றை இங்கு பெற்றுக்கொள்ளலாம்

Other activities ஏனைய சேவைகள்
Nursery Garden - Medicinal Plants (மூலிகை தாவரங்கள்)
Medicinal leach (லீச் அட்டை வளர்ப்பு)

Neithal Beach city
Amman Kovil Road,
Navatkuli Jafina

Contact No-0762942218

# தென் ஆஸ்திரேலியாவின் ஆளுநரை பிரதமர் சந்தித்தார்





கொழும்பு, ஜூன் 24

தென் ஆஸ்திரேலியாவின் ஆளுநர் திருமதி குசயஉெநள யுனயஅளழெ யுஊ அவர்கள் கடந்த 22ஆம் திகதி பிரதமர் அலுவலகத்தில் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரியாவைச் சந்தித்தார்.

ஆளுநரை வரவேற்ற பிரதமர், இலங்கை மற்றும் ஆஸ்திரேலியா ஆகிய இரு நாடுகளுக்கும் இடையே, குறிப்பாகக் கல்வித் துறையில் பேணப்பட்டு வரும் நீண்டகால நட்பு மற்றும் ஒத்துழைப்பு பற்றி விசேடமாக நினைவு கூறினார் . கல்விச் சீர்திருத்தம், தொழிற்பயிற்சி மற்றும் நிறுவன கூட்டாண்மை மற்றும் இருதரப்பு ஒத்துழைப்பினை வலுப்படுத்துதல் ஆகியவற்றின் மீதும் இந்தக் கலந்துரையாடலின் போது கவனம் செலுத்தப்பட்டது.

சமீபகால பொருளாதார மற்றும் அரசியல் சவால்களின் போது மக்களின் உடனடி தேவைகளைப் பூர்த்தி செய்யும் நடவடிக்கைகளுக்கு அரசாங்கம் முன்னுரிமை அளித்துள்ள விதம் பற்றி பிரதமர், பிரதிநிதிகள் குழுவிற்கு எடுத்துரைத்தார். உயர்கல்வி கொள்கையை வலுப்படுத்துதல் மற்றும் அரச சார்பற்ற உயர்கல்வி நிறுவனங்களை ஒழுங்குபடுத்துதல், தொழிற்கல்வியின் சீர்திருத்தங்கள் உட்படத் தொடர்ச்சியான கல்வி சீர்திருத்தங்கள் பற்றியும் பிரதமர் விவரித்தார்.

இலங்கையில் ஆஸ்திரேலியா உயர்ஸ்தானிகர் போல் ஸ்டீவன்ஸ் மற்றும் சிரேஷ்ட ஆஸ்திரேலியா அதிகாரிகள் குழுவினரும் இந்த கூட்டத்தில் கலந்து கொண்டனர். இலங்கை பிரதிநிதிகள் குழுவில் பிரதமரின் செயலாளர் பிரதீப் சபுதந்திரி, பிரதமரின் மேலதிக செயலாளர் சாகரிக்கா போகஹவத்த, கல்வி மற்றும் தொழிற்பயிற்சி அமைச்சின் செயலாளர் நாலக கலுவெவ மற்றும் வெளியுறவு அமைச்சின் கிழக்காசியப் பிரிவின் பணிப்பாளர் உதானி குணவர்தன ஆகியோரும் கலந்து கொண்டனர். (ஐ)

## மாந்தை மேற்கு பிரதேச சபையும் 'சங்கு' வசம்! தவிசாளரானார் ஞானப்பிரகாசம் பிரேம்குமார்!!



மன்னார், ஜூன் 24

மன்னார் மாந்தை மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் மற்றும் உப தவிசாளரைத் தெரிவு செய்வதற்கான அமர்வு இன்று பிற்பகல் 2.30 மணியளவில் வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் திருமதி. தேவந்தினி பாபு தலைமையில் மாந்தை மேற்கு பிரதேச சபையில் நடைபெற்றது.

இதன்போது தவிசாளரைத்தெரிவுசெய்வதற்கான அழைப்பு விடுக்கப்பட்ட நிலையில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் உறுப்பினர் ஞானப்பிரகாசம் பிரேம்குமார் மற்றும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் உறுப்பினர் செபமாலை கமலச்சந்திரன் ஆகியோரின் பெயர்கள் முன்மொழியப்பட்டன. இதன்போது சபையில் உள்ள 21 உறுப்பினர்களில் ஓர் உறுப்பினர் கலந்துகொள்ளவில்லை.

ஏனைய 20 உறுப்பினர்களும் கலந்து கொண்டு பகிரங்க வாக்கெடுப்பைக் கோரினர்.

இதன்போது இலங்கைத் தமிழரசுக் கட்சியின் உறுப்பினர் செபமாலை கமலச்சந்திரன் 5 வாக்குகளையும், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் உறுப்பினர் ஞானப்பிரகாசம் பிரேம்குமார் 15 வாக்குகளையும் பெற்றுக்கொண்டனர்.

இந்தநிலையில், அதிகூடிய வாக்குகளைப் பெற்ற ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் உறுப்பினர் ஞானப்பிரகாசம் பிரேம்குமார் மாந்தை மேற்கு பிரதேச சபையின் தவிசாளராகத் தெரிவு செய்யப்பட்டார். அவருக்கு தேசிய மக்கள் சக்தி, ஐக்கிய மக்கள் சக்தி, தொழிலாளர் கட்சி ஆகியவை ஆதரவு வழங்கின.

மேலும் உப தவிசாளர் தெரிவு இடம்பெற்ற போது தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர் நிஸாம் நிஜாத் போட்டியின்றி உப தவிசாளராகத் தெரிவு செய்யப்பட்டார்.

## கார் விபத்தில் சிறுமி உட்பட இருவர் மரணம்


மட்டக்களப்பு, ஏறாவூர் பொலிஸ் பிரிவிலுள்ள வந்தாறுமூலையில் இருந்து களுவங்கேணி நோக்கிப் பயணித்த கார், இரண்டாவது மையில் கல் பகுதியில் வேகக் கட்டுப்பாட்டை மீறி வீதியை விட்டு விலகி பனை மரத்துடன் மோதிய விபத்தில் காரைச் செலுத்தி சென்றவர் மற்றும் 15 வயது சிறுமி உயிரிழந்ததுடன் பெண் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இந்த விபத்துச் சம்பவம் நேற்று திங்கட்கிழமை அதிகாலை 4.45 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

மட்டக்களப்பு, சின்ன ஊறணி, கருவப்பங்கேணி, செலியன் வீதி இரண்டாம் குறுக்கைச் சேர்ந்த ஜெந்திரகுமார் சஞ்சய், கருவப்பங்கேணி மற்றும் நாவலர் வீதியைச் சேர்ந்த 15 வயது சிறுமியான பிரதீபன் தவஸ்வாணி ஆகிய இருவரும் உயிரிழந்துள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்த பெண்ணின் கணவர் வெளிநாட்டில் இருந்து வரும் நிலையில் உயிரிழந்த சிறுமியான மகளுடன் கருவப்பங்கேணியில் உள்ள அவர்களது பன்றி வளர்க்கும் பண்ணையைப் பார்ப்பதற்காக சம்பவ தினமான நேற்று அதிகாலை கார் சாரதியுடன் பயணித்தபோது கார் வேகக் கட்டுப்பாட்டை மீறி பனை மரத்துடன் மோதி விபத்துக்குள்ளானதில் சாரதியும் 15 சிறுமியும் உயிரிழந்துள்ளனர். படுகாயமடைந்த சிறுமியின் தாயாரான பாலச்சந்திரன் மோகனகாந்தி மட்டு. போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ஏறாவூர் போக்குவரத்துப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## இ.தொ.கா உள்ளூராட்சி மன்றத் தலைவர்கள் பதவி பிரமாணம்





கொழும்பு, ஜூன் 24

2025 உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் சேவல் சின்னத்தில், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் சார்பாக போட்டியிட்டு நுவரெலியா மாவட்டம் நுவரெலியா மாநகர சபை, நுவரெலியா பிரதேச சபை, அக்கரபத்தனை பிரதேச சபை, கொட்டகலை பிரதேச சபை ஆகிய உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்களாக தெரிவு செய்யப்பட்டவர்கள் திங்கட்கிழமை(23) அன்று பதவிப் பிரமாணம் செய்துக்கொண்டனர்.

இதன் அடிப்படையில் நுவரெலியா மாநகர சபையின் பிரதி மேயராக இ.தொ.கா வின் சிவன்ஜோதி யோகராஜ், நுவரெலியா பிரதேச சபை தவிசாளராக வேலு யோகராஜ், அக்கரபத்தனை பிரதேச சபை தவிசாளராக ரதிதேவி, கொட்டகலை பிரதேச சபையின் தவிசாளராக ராஜமனி பிரசாத் ஆகியோர் உத்தியோகப்பூர்வமாக தமது கடமைகளை பொறுப்பேற்றுக்கொண்டனர்.

அவர்கள், நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், இ.தொ.கா பொதுச் செயலாளருமான ஜீவன் தொண்டமான், முன்னிலையில் பதவி ஏற்கும் பத்திரத்தில் கையெழுத்திட்டு, உள்ளூராட்சி மன்றம் செயலாளர்களிடம் பத்திரத்தை சமர்ப்பித்தனர்.

இந்நிகழ்வில் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், இ.தொ.கா பொதுச்செயலாளருமான ஜீவன் தொண்டமான், தலைவர் செந்தில் தொண்டமான், நிதிச்செயலாளரும் தவிசாளருமான மருதபாண்டி ராமேஸ்வரன், பிரதி தலைவர் கணபதி கனகராஜ், பிரதி தவிசாளர் ராஜதுரை, உள்ளூராட்சி மன்றம் செயலாளர்கள், உறுப்பினர்கள் மற்றும் இ.தொ.கா வின் முக்கியஸ்த்தர்கள் என பலர் கலந்து கொண்டனர். (ஐ)

# பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கை ரூ.2,000 கோடிக்கு ஆயுதங்கள் அவசரகால கொள்முதலுக்கு ராணுவம் ஒப்பந்தம்



இந்திய ராணுவத்தின் பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கை அதிகரிக்க, ரூ.2 ஆயிரம் கோடிக்கு ஆயுதங்கள் அவசரகால கொள்முதல் செய்ய ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு உள்ளது.

பஹல்காமில் பயங்கரவாத தாக்குதல் நடத்திய பயங்கரவாதிகளுக்கு பாடம் புகட்ட, ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கை தொடங்கப்பட்டது. இந்த நடவடிக்கைக்கு பிறகு ஆயுதம் கொள்முதலில் பாதுகாப்பு துறை கவனம் செலுத்தி வருகிறது. வானில் நீண்ட தூரம் சென்று தாக்கும் ட்ரோன்கள் உள்ளிட்ட ஆயுதங்கள் வாங்க முடிவு செய்யப்பட்டது.

இந்நிலையில் பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கை அதிகரிக்க, அவசரகால கொள்முதல் திட்டத்தின் கீழ், ரூ.1,981 கோடியில் ஆயுதம் கொள்முதல் செய்ய, 13 ஒப்பந்தங்கள் போடப்பட்டுள்ளது. ஒட்டுமொத்தமா,க ரூ.2,000 கோடியில் ஒப்பந்தங்கள் இறுதி செய்யப்பட்டுள்ளன. இதற்கு மத்திய பாதுகாப்பு துறை அமைச்சகம் ஒப்புதல் அளித்துள்ளது.

தற்போது வாங்கப்பட்ட ஆயுதங்கள் விவரம் பின்வருமாறு:
எதிரி ட்ரோன்களை துல்லியமாக அழிக்கும் ஆயுதங்கள்.
குறைந்த அளவிலான இலகுரக ரேடார்கள் (டுடுசு).
மிக குறுகிய இடத்தில் துல்லியமாக தாக்கும் ஏவுகணைகள்.
குண்டு துளைக்காத ஜாக்கெட்டுகள்
இரவிலும் பார்வையிடும் திறன் கொண்ட கருவிகள்
பாலஸ்டிக் ஹெல்மெட்
வெடிமருந்துகள் மற்றும் பல்வேறு வகையான ட்ரோன்கள் வாங்கப்பட உள்ளன. (ஐ)

## பெயரை மாற்றச்சொன்ன சென்சார் போர்டு: அமைச்சர் சுரேஷ் கோபி படத்துக்கு சிக்கல்



பா.ஜ.,வை சேர்ந்த மத்திய இணையமைச்சர் சுரேஷ்கோபி நடித்துள்ள, ஜானகி வெர்சஸ் ஸ்டேட் ஆப் கேரளா படத்தின் பெயரை மாற்றச்சொல்லி சென்சார் வாரியம் நிர்ப்பந்தித்ததை அடுத்து, அப்படத்தின் வெளியீடு தள்ளி வைக்கப்பட்டுள்ளது.

பாலியல் வன்கொடுமைக்கு ஆளான இளம்பெண் அதை சட்டப் போராட்டத்துடன் எதிர்கொள்ளும் சம்பவங்களை மையமாக வைத்து உருவாக்கப்பட்டு உள்ளது.

இந்த படத்தில் கதாநாயகியாக அனுபமா பரமேஸ்வரன் நடித்துள்ளார். பிரவீன் நாராயணன் இயக்கியுள்ள இந்த மலையாளப் படம் வரும் 27ம் தேதி வெளியிடப்படும் என அறிவிக்கப்பட்டு இருந்தது.

திருவனந்தபுரத்தில் செயல்படும் மத்திய அரசின் 'சென்சார் போர்டு' எனப்படும் திரைப்பட தணிக்கை சான்றிதழ் வாரியம், படத்துக்கு 'யுஃஏ' சான்றிதழ் வழங்கியிருந்தது.

இதற்கிடையே படத்தின் தலைப்பில் சீதா தேவியின் பெயரான ஜானகி இடம்பெற்றிருப்பதால், மறுதணிக்கைக்கு மும்பையில் உள்ள சென்சார் வாரியத்துக்கு இப்படம் அனுப்பி வைக்கப்பட்டது.

இதுகுறித்து படத்தின் இயக்குநர் பிரவீன் கூறியதாவது:

சென்சார் வாரியத்தின் திருவனந்தபுரம் கிளை படத்துக்கு அனுமதியளித்தது. தலைப்பில் ஜானகி என இருப்பதால், அது தொடர்பான ஆலோசனைக்காக மும்பைக்கு தணிக்கைக்கு அதிகாரிகள் அனுப்பிவைத்தனர். சீதாதேவின் பெயர் இருப்பதால், தலைப்பை மாற்றும்படி அதிகாரிகள் அறிவுறுத்தியுள்ளனர். அவ்வாறு மாற்றினால், படத்தின் சில காட்சிகள் மற்றும் வசனங்களையும் மாற்ற வேண்டி வரும். என்ன செய்வதென்று தெரியவில்லை. அதிகாரிகளின் கெடுபிடியால், படத்தை திட்டமிட்டபடி வரும் 27ம் திகதீ வெளியிட முடியாத சூழல் ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.

திரைப்பட தணிக்கை சான்றிதழ் வாரியத்தின் செயலுக்கு கேரள திரைப்பட ஊழியர் கூட்டமைப்பு கண்டனம் தெரிவித்துள்ளது.

இந்த நிலை தொடர்ந்தால், சென்சார் போர்டுக்கு எதிராக போராட்டத்தில் ஈடுபடுவோம் என அதன் உறுப்பினர்கள் எச்சரித்துள்ளனர். இந்த விவகாரம் குறித்து மத்திய இணை அமைச்சர் சுரேஷ்கோபி எந்த கருத்தும் இதுவரை தெரிவிக்கவில்லை. (ஐ)

## சபரிமலையில் நவக்கிரக பிரதிஷ்டை நடை திறப்பு




சபரிமலை சன்னிதானத்தில் புதிய நவக்கிரக கோயில் பிரதிஷ்டைக்காக ஜுலை 11- ம் திகதி மாலை நடை திறக்கப்படுகிறது.

நந்த கிஷோர் ரூ.22 லட்சம் மோசடி நடிகர் சபரீஷ் ஷெட்டி புகார்

சபரிமலை மாளிகைபுரம் கோயிலின் இடது புறம் உள்ள நவக்கிரக மண்டபத்தை வேறு இடத்தில் அமைக்க வேண்டும் என்று தேவப்பிரசன்னத்தில் கூறப்பட்டது. இதை தொடர்ந்து புதிய கோயில் அமைக்கப்பட்டுள்ளது.

இதற்கான பிரதிஷ்டை ஜுலை 13- ம் திகதி நடைபெறுகிறது. இதற்காக சபரிமலை நடை 11-ம் தேதி மாலை 5:00 மணிக்கு திறக்கப்படுகிறது. தொடர்ந்து தந்திரி கண்டரரு ராஜீவரரு தலைமையில் சுத்திக்கிரியைகள் நடைபெறும். ஜுலை 12- ம் தேதி பிரதிஷ்டைக்கு முன்னோடியான பூஜைகள் நடைபெறும். 13 -அதிகாலை கணபதி ஹோமம், உஷ பூஜை, மரப்பாணி ஆகிய சடங்குகளுக்கு பின்னர் காலை 11:00 முதல் 12:00 மணிக்குள் நவக்கிரக கோயில் பிரதிஷ்டை நடைபெறும். அன்று இரவு சபரிமலை நடை அடைக்கப்படும். அதன் பின் ஜுலை 16- மாலை ஆடி பூஜை களுக்காக நடை திறக்கப்படுகிறது. ஜுலை 11 முதல் 13- வரை சபரிமலையில் தரிசனத்திற்கு ஆன்லைன் முன்பதிவு நேற்று தொடங்கியது. (ஐ)

## டெங்கு, சிக்குன்குனியா தயாராகும் தடுப்பூசிகள்



இந்தியாவில், அடுத்த இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளில் டெங்கு, சிக்குன்குனியாவுக்கு தடுப்பூசி தயாராகி விடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கொசு வாயிலாக டெங்கு, சிக்குன்குனியா போன்ற காய்ச்சல்கள் ஏற்படுகின்றன. 2024ல், 2.34 லட்சம் பேருக்கு டெங்கு ஏற்பட்ட நிலையில், 297 பேர் உயிரிழந்தனர்.

இதேபோல், அந்த ஆண்டில், 1.92 லட்சம் பேர் சிக்குன்குனியாவால் பாதிக்கப்பட்டனர்.

இந்நிலையில், மத்திய உயிரி தொழில்நுட்பத் துறை செயலர் ராஜேஷ் சுதிர் கோகலே டில்லியில் நேற்று செய்தியாளர்களிடம் கூறியதாவது:

6 மாதங்களில் நாய்கடிக்கு ஆளானோர்...39,259 பேர்: சாலையில் நடமாடவே மக்கள் அச்சம்


டெங்கு தடுப்பூசியின் முதற்கட்ட சோதனை வெற்றிகரமாக நடந்துள்ளது. சிக்குன் குனியா தடுப்பூசியின் இரண்டு கட்ட சோதனை நிறைவடைந்து, தரவுகள் பகுப்பாய்வு செய்யப்பட்டு வருகின்றன.

இவ்வாறு அவர் கூறினார்.

டெங்கு, சிக்குன் குனியா தடுப்பூசிகள் தொடர்பாக மத்திய அரசு எந்த காலக்கெடுவும் நிர்ணயிக்கவில்லை என்றாலும், இரண்டு முதல் மூன்று ஆண்டுகளில் அவை சந்தைக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஐ)



# காயமெல்லாம் மறைந்து போகும்!



எந்தச் சூழ்நிலையிலும் யாருக்கும் மன நலம் பாதிக்கப்படலாம். சுய நேசம் அதிலிருந்து துரிதமாக வெளிவர உதவும். ஆனால், பாதிக்கப்பட்டிருப்பது தெரிந்தால் மட்டுமே அதற்கான தீர்வை நோக்கிச் செல்ல முடியும். ஆனால், மனம் சம்பந்தபட்ட விஷயங்களில் அவ்வளவு சீக்கிரம் தெரிய வராது. எல்லாமே நன்றாகப் போவது போல் இருக்கும். திடீரென ஒரு நாள் வெடித்துக் கிளம்பும். அவ்வளவு தூரம் சென்ற பிறகு அதைச் சரி செய்வதும் நாளாகும்.

அதனால் நாம் நன்றாக இருக்கும் போதே, அல்லது அவ்வாறு நம்பும் போதே சில மன நலன் காக்கும் வழிமுறைகளைப் பின்பற்றுதல் நலம். இந்தப் பழக்கம் ஒரு வேளை எப்போதாவது மன நலத்தில் சிக்கல் வந்தால், முதலில் அது மனச்சிக்கல் என்பதைப் புரிந்து கொள்ள முடியும். இல்லாவிடில் அதைப் புரிந்து கொள்ளவே பல நாள் ஆகும். அதற்குள் பாதிப்புகள் அதிகமாக வாய்ப்புள்ளது.

**முதல் படி உடற்பயிற்சி :**

இது என்ன மன நலன் காக்க உடற்பயிற்சியா என்று வியக்க வேண்டாம். உடற்பயிற்சி செய்யும் போது மூளையில் சுரக்கும் சில வேதிப் பொருட்களான டோபமைன், செரடானின், ஆக்ஸிடோசின், என்டோர்பின் இயல்பான மகிழ்ச்சியையும் உற்சாகத்தையும் தரும். மனதில் உள்ள தேவையற்ற குப்பைகளை மறக்கடித்து உற்சாகப்படுத்தும். நம் அனைவருக்கும் எந்த வயதில் இருந்தாலும் முடிந்த உடற்பயிற்சி அவசியம். அது உடலுக்கு மட்டுமல்ல மனதிற்கும் ஆரோக்கியம்.

மனதிற்குப் பிடித்த செயல்களில் ஈடுபடுதல் :

மனதிற்குப் பிடித்த செயல்களைச் செய்யும் போது அதனால் கிடைக்கும் மன நிறைவும், மற்றவரின் பாராட்டும் டோபமைனைச் சுரக்க வைக்கும். மகிழ்ச்சியை உள்ளிருந்து மலர வைக்கும்.

**நிறைவான தாம்பத்தியம்**

நிறைவான மகிழ்ச்சி யான தாம்பத்தியதிலும், காதலுடன் அணைக்கும் போதும் ஆக்சிடோஸின் சுரக்கிறது. குழந்தைக்கு மகிழ்ச்சியும் பால் கொடுக்கும் போதும் அதே ஆக்சிடோஸின் சுரக்கிறது. அதுமட்டுமல்லாமல், காதலின் எந்தச் செயலிலும் ஆக்ஸிடோஸின் தாராள மாகச் சுரக்கிறது. எந்த வயதிலும் காதலிப்பது இந்த ஹப்பி ஹோர்மோன களைச் சுரக்க வைத்து நம்மை எப்போதும் மகிழ்ச்சியாக, இளமையாக வைத்திருக்கும்..

**சூரிய ஒளி**

மகிழ்ச்சிக்கான வேதி பொருட்கள் சுரப்பதில் சூரிய ஒளிக்கு முக்கியப் பங்குண்டு.

**தியானம்**

மனதைத் தியானத்தினால் அமைதி படுத்தும் போதும் இந்த வேதிபொருட்கள் சுரக்கின்றன.

நல்ல உணவு

நல்ல உணவென்பது பார்ப்பதை எல்லாம் வயிறு நிறைய உண்பதல்ல. நம் வயிற்றைப் பதம் பார்க்காமல், செரிமானத்திற்குச் சுலபமான, சத்தான உணவு வகைகள். இவை மகிழ்ச்சிக்கான வேதிப் பொருட்களைத் தாராளமாகச் சுரக்க வைக்கிறது.

இதைத் தவிர நல்ல எண்ணங்கள், பிறருக்குத் தன்னால் இயன்ற உதவியைச் செய்வது போன்ற தன்னலமில்லா செயல்களும் இந்த ஹப்பி ஹோர்மோன்கள் சுரக்க உதவுகின்றன.

இந்த வேதிப் பொருட்கள் மூளையில் சுரக்காவிடில் என்ன ஆகும் ?


நமக்கு எந்தச் செயலையும் செய்ய ஓர் உத்வேகம் இருக்காது.

எல்லாவற்றையும் தள்ளிப்போடுவோம்.

எதிலும் பெரிதாக விருப்பமிருக்காது.

எவ்வளவு கூட்டத்தில் இருந்தாலும் நாம் தனியாக இருப்பது போல் தனிமை உணர்வு தோன்றும்.

சுய மதிப்பு குறைந்துவிடும்.



மூட் ஸ்விங்க்ஸ் எனப்படும், மாறி மாறி வரும் உணர்வுகள்.

எதிலும் நம்பிக்கையற்ற தன்மை

எதிலும் மனதை ஆழமாகச் செலுத்த முடியாமல் போகும்.

எவரிடமும் எதிலும் மனம் ஒட்டாது.

ஆக மொத்தத்தில் வாழ்வில சலிப்பும் வெறுப்புமே மிஞ்சி இருக்கும். இது போன்ற சமிக்ஞைகள் உங்களுக்கு இருந்தால் உடனே செயலில் இறங்குங்கள்.

ஆகவே தோழமைகளே நம் மன நலனைக் காக்க சிறிய சிறிய முயற்சிகளை எடுக்க ஆரம்பியுங்கள். அதில் பெரிய பெரிய பலன்களைக் காண்பீர்கள்.

உங்களை நீங்கள் நேசிக்கும் போது, உங்கள் மன நலனைக் காக்க இந்தச் சிறிய முயற்சிகளை எடுக்க மாட்டீர்களா என்ன?

# போர் நிறுத்தத்தை மீறாதீர்கள் ஈரான், இஸ்ரேலுக்கு டிரம்ப் வேண்டுகோள்



போர் நிறுத்தத்தை ஈரான், இஸ்ரேல் நாடுகள் மீறக்கூடாது என்று அமெரிக்க அதிபர் டிரம்ப் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

12 நாட்களாக நீடித்து வந்த ஈரான், இஸ்ரேல் நாடுகள் இடையேயான போர் இன்று முடிவுக்கு வந்துவிட்டதாக அமெரிக்க அதிபர் டிரம்ப் அறிவித்தார். டிரம்பின் இந்த அறிவிப்பை முதலில் ஏற்க மறுத்த ஈரான், பின்னர் போர் நிறுத்த ஒப்பந்தத்தில் கையெழுத்திடவில்லை என்று விளக்கம் கூறியது.

சிறிதுநேரத்திலேயே போர் முடிவுக்கு வந்துவிட்டதாக அதிகாரப்பூர்வமாக ஈரான் அறிவித்தது. இதை தொடர்ந்து இஸ்ரேலும் போர் நிறுத்த ஒப்பந்தத்தை ஏற்றுக் கொள்வதாக அதிகாரப்பூர்வமாக அறிவித்தது. அந்நாட்டு பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு, டிரம்புக்கு நன்றி தெரிவித்துள்ளார்.

இந் நிலையில், ட்ரூத் சோஷியல் பக்கத்தில் டிரம்ப் ஒரு பதிவை வெளியிட்டுள்ளார். அதில் அவர் கூறி உள்ளதாவது

போர்நிறுத்தம் தற்போது முதல் அமலுக்கு வந்துவிட்டது. அதை தயவு செய்து மீறாதீர்கள் என்று வேண்டுகோள் விடுத்துள்ளார். (ஐ)



# போர் நிறுத்த அறிவிப்புக்கு முன் ஈரான் தாக்குதல்: இஸ்ரேலில் 4 பேர் பலி

அமெரிக்கா போர் நிறுத்தம் அறிவிப்பை முதலில் ஏற்க மறுத்த ஈரான் பின்னர் நடத்திய தாக்குதலில் இஸ்ரேலில் 4 பேர் கொல்லப்பட்டு உள்ளனர்.

ஈரான், இஸ்ரேல் நாடுகள் இடையே மூண்ட போர் முடிவுக்கு வந்துவிட்டது, போர் நிறுத்தம் அமலாகிறது என்று அமெரிக்க அதிபர் டிரம்ப் அறிவித்து இருக்கிறார். அவரின் அறிவிப்பை ஈரான், முதலில் ஏற்றுக் கொள்ளவில்லை. போர் நிறுத்தம் தொடர்பான எந்த ஒப்பந்தமும் மேற்கொள்ளப்படவில்லை என்று மறுத்தது.

பின்னர், போர் நிறுத்தத்தை அந்நாட்டு அரசு தொலைக்காட்சி மூலம் ஈரான் அதிகாரப்பூர்வமாக அறிவித்தது. இந்நிலையில், போர் நிறுத்தத்தை ஏற்க மறுத்த தருணத்தின் போது, இன்று அதிகாலையில் இஸ்ரேல் மீது ஈரான் தாக்குதல் நடத்தி இருக்கிறது.

இதில் 4 பேர் கொல்லப்பட்டதாகவும், 20 பேர் காயம் அடைந்ததாகவும் அங்குள்ள மீட்பு சேவைகள் குழு அறிவித்துள்ளது. இஸ்ரேலின் தெற்கு பகுதியில் ஒரு கட்டடம் பலத்த சேதம் அடைந்துள்ளது. 2 மணி நேரம் அலை, அலையாக வீசப்பட்ட ஏவுகணைகள் இஸ்ரேலியர்கள் தங்கியுள்ள முகாம்களை தாக்கின என்றும் கூறி உள்ளனர். (ஐ)

# ஈரான் பதில் தாக்குதல் பலவீனமானது: 13ஏவுகணைகளை சுட்டு வீழ்த்தியதாக டிரம்ப் தகவல்!



"அமெரிக்க தளங்கள் மீதான ஈரானின் தாக்குதல் மிகவும் பலவீனமானது. ஈரானின் 14 ஏவுகணைகளில், 13 ஏவுகணைகள் சுட்டு வீழ்த்தப்பட்டன" என அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் தெரிவித்துள்ளார்.

இது குறித்து, அமெரிக்க அதிபர் டிரம்ப் வெளியிட்டுள்ள அறிக்கை: ஈரான் அணுசக்தி நிலையங்களில் தாக்குதல் நடத்தினோம். இதற்கு, அமெரிக்கா மீது ஈரான் நடத்திய பதில் தாக்குதல் பலவீனமானது. அவர்கள் தாக்குதல் நடத்துவார்கள் என நாங்கள் எதிர்பார்த்தோம். அதை மிகவும் திறம்பட எதிர்கொண்டோம். ஈரான் ஏவிய 14 ஏவுகணைகளில், 13 ஏவுகணைகள் சுட்டு வீழ்த்தப்பட்டன.

அமெரிக்கா தாக்கிய அடுத்த நாளே மோதல் தீவிரம்: ஈரான் தாக்குதலால் இஸ்ரேல் முழுவதும் ஒலித்த சைரன் சத்தம்!

ஒரு ஏவுகணை விடுவிக்கப்பட்டது. அது அச்சுறுத்தல்களை ஏற்படுத்தவில்லை. எந்த அமெரிக்கர்களும் பாதிக்கப்படவில்லை. எந்த சேதமும் ஏற்படவில்லை என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இனி வெறுப்பு இருக்காது என்று நம்புகிறேன்.

தாக்குதல் நடத்த போகிறோம் என்பதை எங்களுக்கு முன்கூட்டியே அறிவித்ததற்காக ஈரானுக்கு நன்றி தெரிவிக்க விரும்புகிறேன். இதனால் யாரும் உயிரிழக்கவோ, யாரும் காயமடையவோ இல்லை. இவ்வாறு அவர் கூறியுள்ளார். (ஐ)




# கட்டாரில் உள்ள அமெரிக்க தளங்களை தாக்கியது ஈரான்

கட்டார் மற்றும் ஈராக்கில் உள்ள அமெரிக்க தளங்களை குறிவைத்து ஏவுகணை நடவடிக்கை தொடங்கப்பட்டுள்ளதாக ஈரானின் வுயளெஅைெ செய்தியை மேற்கோள் காட்டி அல்-ஜசீரா செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த நடவடிக்கை, "வெற்றி அறிவிப்பு" என்று அழைக்கப்படுகிறது.

ஈரானின் இஸ்லாமிய புரட்சிகர காவல்படை (ஐசுபுஊ) கட்டாரில் உள்ள அமெரிக்க அல்-உதெய்த் விமானத் தளத்தை குறிவைத்து பழிவாங்கும் ஏவுகணைத் தாக்குதலை நடத்தியதாக அதிகாரப்பூர்வமாக உறுதிப்படுத்தியுள்ளதாக ஈரானின் Tasnim செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது (ஐ)

# ஈரானுக்கு ஏன் உதவவில்லை காரணத்தை கூறுகிறார் புடின்



இஸ்ரேல் - ஈரான் இடையேயான போர், 11வது நாளாக நேற்றும் தொடர்ந்தது. இதற்கிடையில், இஸ்ரேலுக்கு ஆதரவாக ஈரான் மீது அமெரிக்கா குண்டுகளை வீசி தாக்குதலில் ஈடுபட்டது.

எப்போதும் ஈரானுக்கு ஆதரவான நிலைப்பாட்டை உடைய ரஷ்யா, இந்த விவகாரத்தில் வெறும் கண்டனம் மட்டும் தெரிவித்துள்ளது. இது, ஈரான் தலைமையை அதிர்ச்சி அடைய வைத்துள்ளது.

இந்நிலையில், ஈரானுக்கு ஆதரவாக ஏன் களமிறங்கவில்லை என்ற நிருபர்களின் கேள்விக்கு, ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின் நேற்று கூறியுள்ளதாவது:

இஸ்ரேலில் ரஷ்ய மொழி பேசும் மக்கள் 20 லட்சத்துக்கும் மேற்பட்டோர் வாழ்கின்றனர். இஸ்ரேல் இன்று ரஷ்ய மொழி பேசும் தேசம். ரஷ்யாவின் சமகால அரசியலில் இதை நிச்சயமாக நாங்கள் கருத்தில் கொள்வோம்.

எனவே, இஸ்ரேல் - ஈரான் சண்டையில் நடுநிலை என்பதே எங்கள் நிலைப்பாடு. அதே சமயம் ரஷ்யா, முஸ்லிம் மற்றும் அரபு நாடுகளின் நீண்டகால நண்பன். ரஷ்யாவின் மக்கள் தொகையில் 15 சதவீதம் பேர் முஸ்லிம்கள் இவ்வாறு அவர் கூறினார். (ஐ)

## மன்னார் பிரதேச....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உறுப்பினர் ஏ.ஜே.எம்.ஜப்ரான் தெரிவு செய்யப்பட்டுள்ளார். அதேவேளை, உப தவிசாளராக ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் உறுப்பினர் றொயிட்டன் சாந்தின் குரூஸ் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

மன்னார் பிரதேச சபையின் தவிசாளர் மற்றும் உப தவிசாளரைத் தெரிவு செய்வதற்கான அமர்வு இன்று காலை 8.30 மணியளவில் வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் திருமதி. தேவந்தினி பாபு தலைமையில் நடைபெற்றது.

இதன்போது தவிசாளரைத் தெரிவு செய்வதற்கான அழைப்பு விடுக்கப்பட்ட நிலையில், இலங்கைத் தமிழரசுக் கட்சி உறுப்பினர் கிறிஸ்ரி றெவல் மற்றும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சி உறுப்பினர் ஏ.ஜே.எம்.ஜப்ரான் ஆகியோரின் பெயர்கள் முன்மொழியப்பட்டன.

இதன்போது சபையில் உள்ள 22 உறுப்பினர்களும் பகிரங்க வாக்கெடுப்பைக் கோரினர்.

பகிரங்க வாக்களிப்புக்கமைய இலங்கைத்தமிழரசுக் கட்சியின் உறுப்பினர் கிறிஸ்ரி றெவலுக்கு ஆதரவாக 9 வாக்குகளும், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சி உறுப்பினர் ஏ.ஜே.எம்.ஜப்ரானுக்கு ஆதரவாக 13 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

அதற்கமைய அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சி உறுப்பினர் ஏ.ஜே.எம்.ஜப்ரான் மன்னார் பிரதேச சபையின் தவிசாளராகத் தெரிவு செய்யப்பட்டார். அவருக்கு ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி மற்றும் தேசிய மக்கள் சக்தி ஆகிய கட்சிகளின் உறுப்பினர்கள் ஆதரவு வழங்கியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதையடுத்து உப தவிசாளர் தெரிவு இடம்பெற்றது. இதன்போது உப தவிசாளர் தெரிவுக்கு ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் உறுப்பினர் றொயிட்டன் சாந்தினி குரூஸ் மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உறுப்பினர் இஸ்மாயில் முஹம்மது இஸ்ஸதீன் ஆகியோரின் பெயர்கள் முன்மொழியப்பட்டன.

இதன்போது 22 உறுப்பினர்களும் பகிரங்க வாக்கெடுப்பைக் கோரினர்.

பகிரங்க வாக்களிப்புக்கமைய ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் உறுப்பினர் றொயிட்டன் சாந்தினி குரூஸ்/க்கு 15 வாக்குகளும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உறுப்பினர் இஸ்மாயில் முஹம்மது இஸ்ஸதீனுக்கு 7 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

அதற்கமைய மன்னார் பிரதேச சபையின் உப தவிசாளராக ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் உறுப்பினர் றொயிட்டன் சாந்தினி குரூஸ் தெரிவு செய்யப்பட்டார்.

அவருக்கு அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், தேசிய மக்கள் சக்தி, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ், சுயேச்சைக் குழு ஆகியவற்றின் உறுப்பினர்களும் ஆதரவு வழங்கியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## மன்னார் நகர....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கூட்டணி கைப்பற்றியுள்ளது.

நகர பிதாவாக ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் உறுப்பினர் டானியல் வசந்தன் தெரிவு செய்யப்பட்டுள்ளார். அதேவேளை, துணை நகர பிதாவாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் உறுப்பினர் நூர் முகம்மது முகம்மது உசன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

மன்னார் நகர சபையின் நகர பிதா மற்றும் துணை நகர பிதாவைத் தெரிவு செய்வதற்கான அமர்வு இன்று முற்பகல் 11.30 மணியளவில் வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் திருமதி. தேவந்தினி பாபு தலைமையில் மன்னார் நகர சபையில் நடைபெற்றது.

இதன்போது நகர பிதாவைத் தெரிவு செய்வதற்கான அழைப்பு விடுக்கப்பட்ட நிலையில் தமிழ் மக்கள் கூட்டணியின் உறுப்பினர் ஞானப்பிரகாசம் அன்ரனி டேவிட்சன் மற்றும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் உறுப்பினர் டானியல் வசந்தன் ஆகியோரின் பெயர்கள் முன்மொழியப்பட்டன.

சபைக்குத் தெரிவாகியுள்ள 16 உறுப்பினர்களில் 15 உறுப்பினர்கள் இன்றைய அமர்வுக்கு வருகை தந்ததோடு, ஓர் உறுப்பினர் வருகை தரவில்லை.

நகர பிதா தெரிவில் அதிக உறுப்பினர்கள் பகிரங்க வாக்கெடுப்பைக் கோரினர்.

அமர்வில் கலந்துகொண்ட 15 உறுப்பினர்களில் 14 உறுப்பினர்கள் வாக்களித்தனர். ஓர் உறுப்பினர் நடுநிலை வகித்தார்.

தமிழ் மக்கள் கூட்டணியின் உறுப்பினர் ஞானப்பிரகாசம் அன்ரனி டேவிட்சனுக்கு 6 வாக்குகளும், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் உறுப்பினர் டானியல் வசந்தனுக்கு 8 வாக்குகளும் கிடைத்தன.

அதற்கமைய கூடிய வாக்குகளைப் பெற்ற ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் உறுப்பினர் டானியல் வசந்தன் மன்னார் நகர சபையின் நகர பிதாவாகத் தெரிவு செய்யப்பட்டார். அவருக்கு அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், தேசிய மக்கள் சக்தி கட்சிகளின் உறுப்பினர்கள் ஆதரவு வழங்கியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதையடுத்து துணை நகர பிதா தெரிவு இடம்பெற்றது.

துணை நகர பிதா தெரிவுக்கு அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் உறுப்பினர் நூர் முகம்மது முகம்மது உசன் மற்றும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் உறுப்பினர் சோமநாத் பிரசாத் ஆகியோரின் பெயர்கள் முன்மொழியப்பட்டன.

இதன்போது கூடுதலான உறுப்பினர்கள் பகிரங்க வாக்கெடுப்பைக் கோரினர்.

வாக்களிப்பில் இரண்டு உறுப்பினர்கள் நடுநிலை வகித்தனர்.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சி உறுப்பினர் நூர் முகம்மது முகம்மது உசன் 8 வாக்குகளையும், இலங்கைத் தமிழரசுக் கட்சி உறுப்பினர் சோமநாத் பிரசாத் 5 வாக்குகளையும் பெற்றனர்.

அதற்கமைய கூடுதல் வாக்குகளைப் பெற்ற நூர் முகம்மது முகம்மது உசன் மன்னார் நகர சபையின் துணை நகர பிதாவாகத் தெரிவு செய்யப்பட்டார். அவருக்கு ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி, தேசிய மக்கள் சக்தி கட்சிகளின் உறுப்பினர்கள் ஆதரவு வழங்கியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தத் தெரிவுகளின்போது நாடாளுமன்ற உறுப்பினர்களான ரிஷாத் பதியுதீன், செல்வம் அடைக்கலநாதன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வினோநோகராதலிங்கம் உள்ளிட்ட பலர் வருகை தந்திருந்தனர்.

## திருகோணமலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மி தலைமையில் நடைபெற்ற அமர்வில் தவிசாளருக்கான தெரிவின்போது இலங்கைத்தமிழரசுக் கட்சியின் சார்பில் போட்டியிட்ட வெள்ளைத்தம்பி சுரேஷ்குமார் 16 வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றார். அவர் தம்மை எதிர்த்துப் போட்டியிட்ட தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர் டி.எச்.எஸ்.சத்துர லக்மாலைவிட 12 அதிக வாக்குகளைப் பெற்றார்.

இதையடுத்து உப தவிசாளருக்கான தெரிவின் போது சுயேச்சைக் குழு உறுப்பினர் கயிலைநாதன் வயிரவநாதன் 9 வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றார். இவரை எதிர்த்துப் போட்டியிட்ட ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர் ஏ.எல்.எம்.நௌபர் 7 வாக்குகளைப் பெற்றார்.

20 ஆசனங்களைக் கொண்ட திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச சபையில் முறையே இலங்கைத் தமிழரசுக் கட்சி 6, தேசிய மக்கள் சக்தி 4, ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி 3, ஐக்கிய மக்கள் சக்தி 2, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் 1, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் 1, சுயேச்சைக் குழுக்கள் 3 என்ற வகையில் உறுப்பினர்களைப் பெற்றிருந்தன.

## குச்சவெளி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தெரிவு செய்வதற்கான கூட்டம் கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மி தலைமையில் நடைபெற்றபோதே சபையின் ஆட்சி அதிகாரத்தை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பெற்றுக்கொண்டது.

இந்தச் சபையின் 9 உறுப்பினர்களின் ஆதரவுடன் தவிசாளர் பதவிக்காகப் போட்டியிட்ட அயினியாப்பிள்ளை முபாரக் வெற்றி பெற்றார்.

தவிசாளர் தெரிவு பகிரங்க வாக்கெடுப்பின் மூலமாகவா அல்லது இரகசிய முறையிலா நடைபெற வேண்டும் என ஆணையாளர் கேட்டார். இத்தருணம் தனக்கு உயிர் அச்சுறுத்தல் உள்ளது எனவும், எனவே இரகசிய வாக்கெடுப்பு வேண்டும் எனவும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் உறுப்பினர் அப்துல் மனாப் றிஷான் கூறினார். இந்தக் கருத்தை அவரது கட்சியின் ஏனைய மூன்று உறுப்பினர்களும் கூறினர். அத்துடன் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் இரண்டு உறுப்பினர்களும் இரகசிய வாக்கெடுப்பைக் கோரினர். ஆனால், சபையில் இருந்த ஏனைய 10 உறுப்பினர்களும் பகிரங்க வாக்கெடுப்பை நடத்தும்படி கேட்டுக்கொண்டனர்.

இதையடுத்துப் பெரும்பான்மையானவர்களின் கருத்தைத் தாம் ஏற்பதாக ஆணையாளர் கூறி வாக்கெடுப்பை ஆரம்பித்தார். அவ்வேளை இரகசிய வாக்கெடுப்பைக் கோரிய 6 உறுப்பினர்களும், மேலும் ஒரு இலங்கைத் தமிழரசுக் கட்சி உறுப்பினரும் வாக்கெடுப்பு இரகசிய முறையில் நடத்தப்படாதமையை ஆட்சேபித்து சபையில் இருந்து வெளியேறினர்.

இதற்கு முன்னர் தவிசாளருக்கான முன்மொழிவை முன்வைக்குமாறு சபையினரை ஆணையாளர் கோரிய போது அப்துல் மனாப் றிஷானின் பெயர் முன்மொழியப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. அதன்படி அ.முபாரக்வுடன் இவர் போட்டியிட இருந்தார்.

இந்தச் சபையில் 17 ஆசனங்கள் உள்ளன. இதன்படி ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் 5, இலங்கைத் தமிழரசுக் கட்சி 4, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் 4, ஐக்கிய மக்கள் சக்தி 2, தேசிய மக்கள் சக்தி 1, சுயேச்சைக் குழு 1 என்ற எண்ணிக்கையில் உறுப்பினர்கள் தெரிவாகி இருந்தனர்.

இந்த உறுப்பினர்களில் ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் கட்சியின் 5 உறுப்பினர்களும், ஐக்கிய மக்கள் சக்தியின் 2 உறுப்பினர்களும், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஓர் உறுப்பினரும், சுயேச்சைக் குழு உறுப்பினர் ஒருவரும் அ.முபாரக்குக்கு ஆதரவாக வாக்களித்தனர்.

தொடர்ந்து உப தவிசாளர் தெரிவு பற்றிய அறிவிப்பை ஆணையாளர் வெளியிட்ட போது சபையை 15 நிமிடங்கள் ஒத்திவைக்குமாறு சபையில் இருந்த 8 உறுப்பினர்களும் புதிய தவிசாளரைக் கேட்டனர். இதையடுத்து 15 நிமிடங்கள் சபை ஒத்திவைக்கப்பட்டது.

மீண்டும் சபை கூடிய போது உப தவிசாளராக ஐக்கிய மக்கள் சக்தியின் வகர்தீன் மொஹமட் நிஷாத்தின் பெயர் பிரேரிக்கப்பட்டது. வேறு பிரேரணைகள் இல்லாத நிலையில் அவர் உப தவிசாளராகத் தெரிவானார். அந்தத் தருணம் ஐக்கிய மக்கள் சக்தியின் மற்றுமொரு உறுப்பின் இந்தத் தெரிவை ஆட்சேபித்து சபையை விட்டு வெளியேறினார்.

இந்தச் சபையில் தமது இரு கட்சிகளும் இணைந்து ஆட்சியமைப்பது என்று சில வாரங்களுக்கு முன்னர் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் இலங்கைத் தமிழரசுக் கட்சி என்பன இணைந்து ஒப்பந்தம் செய்திருந்த போதும், அந்த ஒப்பந்தத்துக்கு மாற்றமாக இந்தச் சபையில் ஐக்கிய மக்கள் சக்திக்கு உப தவிசாளர் பதவி தற்போது வழங்கப்பட்டுள்ளது.

## யாழ்.மாவட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஊழியர்கள், பிரதேச சபையின் செயலர்கள் மற்றும் யாழ். மாவட்டத்தின் பல்துறைசார் பொறுப்பு நிலை அதிகாரிகள் ஆகியோரின் பிரசன்னத்துடன் நடைபெற்றது.

யாழ்ப்பாணம் மாவட்டத்தின் அரச அதிபராக மருதலிங்கம் பிரதீபனுக்குக் கடந்த 20 ஆம் திகதி நியமனக் கடிதம் வழங்கப்பட்டது.

மருதலிங்கம் பிரதீபன் கடந்த 2024 மார்ச் 9 ஆம் திகதி முதல் யாழ்ப்பாணம் மாவட்டத்தின் பதில் மாவட்ட அரச அதிபராகக் கடமையாற்றி வந்தமை குறிப்பிடத்தக்கது

## 2ஆம் நாளாக....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

போராட்டத்தின் இரண்டாம் நாள் நிகழ்வு இன்று காலை 10 மணியளவில் மலர் அஞ்சலியுடன் ஆரம்பமானது. அதனைத் தொடர்ந்து சர்வ மதத்தலைவர்களின் நீதியுரையும் இடம்பெற்றது.

இன்றைய தினம் இலங்கைத் தமிழரசுக் கட்சியினர் வருகை தந்து இந்தப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்தார்கள். இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் சி.வி.கே.சிவஞானம் மற்றும் கட்சியின் உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்கள், முன்னாள் மாகாண சபை உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இந்தப் போராட்டத்தின் தொடர்ச்சியாக இரவு வேளைகளில் கதை படித்தல், ஆவணப்பட திரையிடல், தெருவெளி நாடகம் என்பன இடம்பெறுகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

இறுதித் தினமான நாளை நடைபெறவுள்ள கவனவீர்ப்புப் போராட்டத்தில் வடக்கு, கிழக்கில் இருந்து பெருமளவிலானோர் கலந்துகொள்ளவுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

# விபத்தில் இருவர் காயம்

திருகோணமலை, ஜூன் 24

திருகோணமலை, புல்மோட்டை பிரதான வீதியின் இரணைக்கேணியில் இன்று நண்பகல் இடம்பெற்ற கார் - மோட்டார் சைக்கிள் விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இரண்டு ஆண்கள் பலத்த காயமடைந்த நிலையில் குச்சவெளி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

காரைச் செலுத்தி வந்தவர் காயங்கள் இன்றி தப்பியுள்ளார். எனினும், கார் மற்றும் மோட்டார் சைக்கிள் என்பன பலத்த சேதமடைந்துள்ளன.

திருகோணமலையில் இருந்து புல்மோட்டை நோக்கி ஒரே திசையில் பயணித்த போது, கார் திடீர் என வலது புறமாகத் திரும்ப முற்பட்டுள்ளது. இதையடுத்தே விபத்து இடம்பெற்றுள்ளது என்று சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் கூறினர்.

இது தொடர்பான விசாரணைகளைக் குச்சவெளி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 24.06.2025 வெளியிடப்பெற்றது.